சுருக்கம்

பணிக்குழு– கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் அயற் பணியில் நகரப் பொறியாளராக பணியாற்றிவரும் திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்களை சேலம் மாநகராட்சியில் திட்டப் பணிகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம்– திரு ஜி.கருணாகரன், செயற்பொறியாளர் (தற்போது மண்டல செயற் பொறியாளர், செங்கற்பட்டு) அவர்களை கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நகரப் பொறியாளராக நியமனம்– ஆணைகள் வெளியிடப்படுகின்றன

= = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை

அரசாணை (2டி) எண்.104 நாள் 26–10–2009

திருவள்ளுவர் ஆண்டு 2040,

ஐப்பசி –9ம் நாள்

படிக்க

1. அரசாணை (2டி) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந5) துறை, நாள் 14.05.08
2. அரசாணை (2டி) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந5) துறை, நாள் 16.02.09
3. ஆணையர், சேலம் மாநகராட்சி கடித எண்.சி3/1496/07, நாள் 22.5.2009.
4. திரு.கே.பாலசுப்பிரமணியன், நகரப் பொறியாளர் மனுநாள் 19.6.2009.
5. திரு ஜி.கருணாகரன், செங்கற்பட்டு மண்டல செயற்பொறியாளர் மனு நாள் 25.09.2009
6. நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.4488/2009/எப்4 நாள் 28–7–2009
7. நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.4488/2009/எப்4 நாள் 28–8–2009
8. நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.4488/2009/எப்4 நாள் 16–10–2009

–––––

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சேலம் மாநகராட்சியில் திட்டப் பணிகளுக்காக ஒரு கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் ரூ.14,300–300–18300 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் சேலம் மாநகராட்சியில் தகுதி பெற்ற பணியாளர் இல்லாத காரணத்தால் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க மேற்காண் கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தினை அயற் பணி அடிப்படையில் பூர்த்தி செய்யுமாறு கோரியுள்ளார்.

. . . . .2

2. **1996–ம்** ஆண்டு தமிழ்நாடு **மாநகராட்சி** பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணி விதிகளில் கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு வழிவகை செய்யப்படவில்லை. தமிழ்நாடு **நகராட்சி** பொறியியல் பணி விதிகள் **1997–ன்**படி செயற் பொறியாளரின் முன்னுரிமைப் பட்டியலில் தகுதி வாய்ந்தவருக்குப் பதவி உயர்வு அளிப்பதன் மூலம் கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் எனவும், அவ்வாறு பதவி உயர்வு பெற ஊட்டுப் பதவியில் (feeder category) (செயற் பொறியாளர் பணியிடத்தில்) மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் எனவும், மேலும் ஓய்வு பெறுவதற்கு முன் இரண்டு ஆண்டு பணிக்காலம் இருக்க வேண்டும் எனவும் விதிகளில் உள்ளது.

3. **நகராட்சி** பொறியியல் பணியைச் சேர்ந்த செயற்பொறியாளரில் முன்னுரிமையிலுள்ள திரு.கே.பாலசுப்பிரமணியன் செயற் பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளராகப் (City Engineer) பணிபுரிய சம்மதம் அளித்ததன் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பதவிக்கு தகுதி வாய்ந்த அலுவலர் இல்லாததால், தமிழ்நாடு **நகராட்சி** பொறியியல் பணியில் பணி மூப்பு பட்டியலில் முதுநிலையில் இருந்த திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்களை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகரப் பொறியாளராக பதவி உயர்வு செய்து ரூ.**12,000–375–16500** என்ற சம்பள விகிதத்தில் அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து உத்தரவிடப்பட்டு அன்னார் **16.2.09** முதல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியாற்றி வருகிறார். மேற்குறிப்பிட்ட திரு.கே.பாலசுப்பிரமணியன் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது மனுவில் சேலம் மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் தன்னை நியமனம் செய்ய பரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளார்.

4. திரு.கே.பாலசுப்பிரமணியன் மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கைகளோ ஒழுங்கு நடவடிக்கை கோப்புகளோ ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளதுடன் **1997–ம்** ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதியின் கீழ் பணியாற்றும் தகுதி பெற்ற செயற் பொறியாளர்களில் முதுநிலையில் வ.எண்.**6–ல்** உள்ள திரு.கே.பாலசுப்பிரமணியம் அவர்களை சேலம் மாநகராட்சியில் திட்டப் பணிகளுக்காக முற்றிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் ரூ.**14000–300–18300** என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

5. நகராட்சிப் பொறியியல் பணியைச் சார்ந்த திரு கே.பாலசுப்பிரமணியன் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நகரப் பொறியாளராக பதவி உயர்வு செய்யப்பட்டு அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியில் **16.2.09** முதல் இன்றைய தேதிவரை சுமார் **8** மாதங்களுக்கு மேல் பணியாற்றிவிட்டார். அவர் அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதற்கு வரைவு வரையரைகள் மற்றும் நிபந்தனைகளை (Terms and Conditions) நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

…3

6. திரு கே.பாலசுப்பிரமணியன் அவர்களை சேலம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்வதனால் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பணியிடத்தினை நிரப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்நிலையில் திரு ஜி.கருணாகரன், செயற்பொறியாளர் (தற்போது மண்டல செயற் பொறியாளர், செங்கற்பட்டு) அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளராக அயற்பணி அடிப்படையில் பணிபுரிய தனது விருப்பத்தினை தெரிவித்துள்ளார் எனவும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதியின் கீழ் பணியாற்றும் செயற்பொறியாளர்கள் முதுநிலைப் பட்டியலில் திரு கே.தனபால், செயற் பொறியாளருக்கு அடுத்தபடியாக வரிசை எண்.8-ல் திரு ஜி. கருணாகரன் உள்ளார் எனவும், அன்னார் 21-04-2003 முதல் செயற் பொறியாளராக பணியாற்றி வருகிறார் எனவும், செயற்பொறியாளர் பணியிடத்தில் 6 ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ளார் எனவும், அவரது பணிஓய்வுநாள் 31-03-2013 எனவும், அவர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவித்து திரு ஜி.கருணாகரன், செயற் பொறியாளர் அவர்களை கோவை மாநகராட்சியில் மாநகரப் பொறியாளராக ரூ.12000-375-16500 என்ற ஊதிய ஏற்ற முறையில் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து கீழ்கண்ட ஆணைகளை பிறப்பிக்கின்றது :-

(i) திரு கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பியுள்ள, வரைவு வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது. (மேற்படி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் திரு கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளராக பணியாற்றிய காலத்திற்கு பொருந்தும்). அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை இவ்வாணையின் இணைப்பில் காணலாம்.

(ii) மேற்படி ஒப்பந்தத்தினை தற்போது ரத்து செய்து திரு கே.பாலசுப்பிரமணியன் அவர்களை சேலம் மாநகராட்சியில் திட்டப் பணிகளுக்காக முற்றிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் ரூ.14300-300-18300 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது. இதற்கான வரைவு வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(iii) தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதியின் கீழ் பணியாற்றும் திரு ஜி.கருணாகரன், செயற் பொறியாளர் (தற்போது மண்டல செயற் பொறியாளர், செங்கற்பட்டு) அவர்களை கோவை மாநகராட்சியில் மாநகரப் பொறியாளராக ரூ.12000-375-16500 என்ற

...4

ஊதிய ஏற்ற முறையில் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது. இந்நியமனத்திற்கு பொருந்துமாறு இவ்வாணையின் இணைப்பில் உள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் தேவையான மாற்றங்கள் (*mutatis mutandis*) மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
ஆணையர், சேலம் மாநகராட்சி, சேலம்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், செங்கற்பட்டு
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், குறளகம், சென்னை–600 108
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந5 / நப3/ அந2) துறை, சென்னை–9
இணைய தளம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்

G.O.(2D).No.104,
Municipal Administration and
Water Supply (MC4) Department,
Dated:26-10-2009

ANNEXURE
TERMS AND CONDITIONS

Government in their Order (2D) NO,11 Municipal Administration and Water Supply Department, dated 16.2.2009 have issued orders for transfer and posting of Thiru K.Balasubramanian, Executive Engineer, Office of the Regional Director of Municipal Administration, Chengleput to Coimbatore Corporation as City Engineer on contract basis and joined duty as City Engineer in the Coimbatore City Municipal Corporation on 16-2-2009. Contract of appointment of Thiru. K.Balasubramanian, City Engineer, in the Coimbatore City Municipal Corporation, will be governed by the following terms and conditions.

(i) The appointment as City Engineer will be for a period from the date of joining to date of his relief.

(ii) He will draw Pay and Allowances as admissible to the post of City Engineer in the Coimbatore City Municipal Corporation.

(iii) Coimbatore City Municipal Corporation shall recover every month the Employees General provident Fund Subscription from the pay of Thiru. K.Balasubramanian at the rate specified by his parent organisation and remit it to that foreign body. The Pension contribution shall be met by the Coimbatore City Municipal Corporation.

(iv) Coimbatore City Municipal Corporation direct to Thiru.K.Balasubramanian, an amount as one time compensatory allowance equivalent to the bonus admissible at the rates as per the payment of Bonus Act as and when paid by the parent organistation to its employees provided that at the time of payment of bonus, the employee continued to service in the Coimbatore City Municipal Corporation. The expenditure on this will be on service share basis for the accounting year between the Coimbatore City Municipal Corporation and the foreign body concerned. In such cases, during the period of deputation Thiru.K.Balasubramanian, will not be eligible for any other ex gratia payment, if any, allowed to the Government employees like pongal gift.

(v) Government also will not pay and contribution towards gratuity. The Gratuity contribution shall be borne by the Municipality for the period of service in the Coimbatore City Municipal Corporation.

…6

(vi) Thiru. K.Balasubramanian, shall be deemed to be member of the parent organization for the purpose of the disciplinary rules, under the service rules Notwithstanding the fact that his services are placed at the disposal of the Coimbatore City Municipal Corporation, if he commits any act of omission or commission which makes him liable to the penalty specified in the said rules, the parent organization under whom he is serving at the time of omission or commission of such act shall be competent to initiate disciplinary proceedings against him and to impose on him such penalties specified in the relevant rules and the Coimbatore City Municipal Corporation under whom his service at the time of institution of such proceedings shall render all responsible facilities to the parent organisation for the institution and conduct of such proceedings.

(vii) Coimbatore City Municipal Corporation shall give leave salary contribution at the termination of the deputation period for the actual earned leave during the period of contract appointment of service after deducting the actual earned leave availed during the contract service period. If the earned leave applied for in a year while on contract exceeds the leave that would accrue for the tenure period mentioned in the appointment, then for such excess days of Earned Leave, the foreign body shall bear the liability by reimbursing the amount to the Coimbatore City Municipal Corporation, first bearing entire leave salary for the earned leave period by the Coimbatore City Municipal Corporation.

(viii) Regarding reimbursement of medical expenditure, it may be left to the option of Thiru.K.Balasubramanian, on contract to get his medical expenditure reimbursed either from the Coimbatore City Municipal Corporation or from the Municipality subject to the stipulation that the option once exercised shall be final for the entire service on contract.

/True copy/

Section officer.